

இளைஞர் எழுச்சி நாளை முன்னிட்டு கரூர் மாவட்ட கழகம் சார்பில் தொடர் விளையாட்டு போட்டிகள் நடைபெற்று வருகின்றன. கரூர் பிரேம் மஹாலில், நடைபெற்ற சதுரங்க போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு ரூ.10 லட்சம் மதிப்பிலான பரிசுத்தொகை பரிசு கோப்பைகளை மாவட்ட கழகச் செயலாளர் வி. செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ வழங்கினார்.

### தி.மு.க. கூட்டணி மகத்தான வெற்றி பெற்று

# 2வது முறையாக மு.க.ஸ்டாலின் முதல்வராக பொறுப்பேற்பார்!

## கரூரில் செய்தியாளர்களிடம் வி. செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. பேட்டி!

கரூர்.டிச.1-

இளைஞர் எழுச்சி நாளை கொண்டாடும் வகையில் கரூர் மாவட்ட அளவில் சதுரங்கப் போட்டிகள் நடைபெற்றன. வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ பரிசுகளை வழங்கினார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாசிகளுடன்,

தமிழ்நாட்டிலிருந்து உலகத்தரத்திலான விளையாட்டு வீரர்களை உருவாக்கிடும் முனைப்பில் அயராது உழைத்திடும், தமிழ்நாடு துணை முதலமைச்சர், நமது இளம்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49வது பிறந்தநாளை கொண்டாடும் வகையில், ரூ. 49 லட்சம் மொத்த பரிசுத் தொகையுடன், நவம்பர் 15 முதல் தொடங்கி டிசம்பர் 28 வரை, கரூர் மாவட்டத்தில், கபடி, சிலம்பம், சதுரங்கம், கைப்பந்து, இறகுப்பந்து, கால்பந்து, சைக்கிள் ரேஸ், ஸ்கேட்டிங், மராத்தான் மற்றும் கிரிக்கெட் என தொடர் விளையாட்டு போட்டி திருவிழா நடைபெற்று வருகிறது.

சிலம்பம் ஆண் பெண்களுக்கான போட்டிகள், கபடி போட்டிகள் சிறப்பாக நடைபெற்று பரிசுகள் வழங்கப்பட்டன. இன்றைய தினம் மாபெரும் சதுரங்க போட்டிகள் நடத்தப்பட்டன. சுமார் 790 பேர் கலந்து கொண்டனர். 240 பேர் பரிசுகளை வென்றனர். ரூ.10 லட்சம் மதிப்பில் பரிசுகள் வழங்கப்பட்டன.

மேற்கு மண்டலத்தில் கட்சி மாறி சென்றவர் குறித்தும், யாருக்கும் யாருக்கும் போட்டி என்பது குறித்தும் கேள்விகளை கேட்கின்றீர்கள் எங்களை பொறுத்த வரை தேர்தல் பணிகளை சிறப்பாக மேற்கொண்டு வருகிறோம் மேற்கு மண்டலம் மட்டுமல்ல தமிழ்நாடு முழுவதும் திமுக கூட்டணி மகத்தான வெற்றி பெற்று முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் இரண்டாவது முறையாக முதலமைச்சராக பொறுப்பேற்பார்கள். கரூர் மாவட்டத்தில் நான்கு தொகுதிகளிலும் உதயசூரியன் வெற்றி பெறும். ஆட்சியின் சாதனைகளை பொறுத்துக்கொள்ள முடியாதவர்கள் சமூக வலைதளங்களில் அவதூறுகளை பரப்பி வருகின்றனர்.

இந்தியாவுக்கே வழிகாட்டக்கூடிய, நாட்டிலேயே முதல் மாநிலமாக தமிழ்நாட்டை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உருவாக்கி இருக்கின்றார்கள். கரூர் மாவட்டத்தை பொருத்தவரை நான்கரை ஆண்டு காலத்தில் ரூ. 4500 கோடி நிதிகளை அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக மட்டும் முதல்வர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். இது தவிர மகளிர் உரிமை தொகை, விடியல் பயணம் போன்ற எண்ணற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மக்கள் பாராட்டக்கூடிய அரசாக இந்த அரசு திகழ்ந்து வருகிறது. யார் கட்சி மாறினாலும் கவலை இல்லை. யாருக்கும் யாருக்கும் போட்டி என்பதை மக்கள் தீர்மானிப்பார்கள். இரண்டாவது முறையாக மு.க.ஸ்டாலின் அவர்களை முதலமைச்சராக ஆக்க வேண்டும் என மக்கள் தீர்மானித்து விட்டனர்.

**சிக்கல் ஏற்படுத்திய அ.தி.மு.க. ஆட்சி**

கரூர் வெண்ணைமலை கோவில் நிலம் பிரச்சனையில் மக்களை குழப்பும் கருத்துக்களை கூறி வருகின்றனர். அதிமுக ஆட்சி காலத்தில் தவறான ஆவணங்களை தாக்கல் செய்ததன் காரணமாக தற்போது சிக்கல் ஏற்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்து விரைவில் தீர்வு எட்டுவதற்கான நடவடிக்கைகளை முதலமைச்சர் அவர்கள் எடுத்து வருகின்றார்கள். அரசு அதிகாரிகள் அறநிலையத் அதிகாரிகள், அரசு வழக்கறிஞர்கள் ஆலோசனை நடத்தி வருகின்றார்கள். எனவே இதில் சந்தேகங்களோ குழப்பங்களோ ஏற்பட அவசியமில்லை.

**தவறு செய்துவிட்டு பொய் பிரச்சாரம் செய்வதா?**

தாங்கள் ஆட்சியில் இருக்கும்போது தவறான அறிக்கையை தாக்கல் செய்து தவறு செய்துவிட்டு, அதை மறைத்து இப்போது அதே மக்களிடம் போய் நாங்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் தீர்வு காண்போம் என பொய்பிரச்சாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். தவறு செய்ததை ஒத்துக் கொள்ள வேண்டும். அதை மறைத்து அவதூறு செய்வது எடுபடாது. என்ன நடந்தது என்பது அனைவருக்கும் தெரியும். ஆனாலும் கூட மக்கள் உணர்வுகளை மதித்து திமுக மற்றும் கூட்டணி கட்சியினர் மக்களுடன் நின்று போராட்டங்களில் பங்கேற்று வருகின்றனர். நாங்கள் மக்களின் பக்கம் இருக்கிறோம். இவ்வாறு அவர் கூறினார்.




தருமபுரி கிழக்கு மாவட்டம் நல்லம்பள்ளி வடக்கு ஒன்றியம் வைகுந்தம் ஏற்பாட்டில் கானாப்பட்டி கிராமத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கேக் வெட்டி பள்ளி மாணவ மாணவியர் மற்றும் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது.உடன் அவைத்தலைவர் சி.கே வேலு,மாவட்ட விளையாட்டு அணி துணை அமைப்பாளர் ரவி மாவட்ட மருத்துவர் அணி துணைத் தலைவர் துணைத் தலைவர் சக்திவேல் மாவட்ட பிரதிநிதிகள் சித்தன் கிருஷ்ணன் உள்ளிட்ட தி.மு.க.வினர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே.பி.என். மாயன்

**டிசம்பர் 1 (2013)**



கொடைக்கானல் நகரச் செயலாளராக தொடர்ந்து 38 ஆண்டுகள் சிறப்புறப் பணியாற்றியவர். திண்டுக்கல் மாவட்ட தி.மு.க. பொறுப்புக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

‘மிசா’ சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறை வாசமும் – இந்தி எதிர்ப்பு, சட்டநகல் எரிப்பு, ஈழத் தமிழர் ஆதரவு ஆகிய போராட்டங்கள் மற்றும் கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

கொடைக்கானல் நகராட்சி, நகரியக் குழு உறுப்பினராகவும், கொடைக்கானல் கூட்டுறவு பண்டகசாலைத் தலைவராக இரண்டு முறையும் – கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தின் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



மயிலாடுதுறை மாவட்டத்தில் டிட்வா புயலையொட்டி கனமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தேசிய பேரிடர் மீட்பு குழுவினர் தரங்கம்பாடியில் முகாமிட்டுள்ளதை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பார்வையிட்டு ஆய்வு செய்யதார் . உடன், மாவட்ட கண்காணிப்பு அலுவலர் கவிதா ராமு,, மாவட்டச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. , எம்.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. மாவட்ட ஆட்சியர்.எஸ். ஸ்ரீகாந்த், தகவல் தொழில் நூட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி.எம். ஸ்ரீதர், மு. ஞானவேலன்,,நகர செயலாளர்கள் என். செல்வராஜ், ம.சுப்பராயன், ஒன்றிய ச் செயலாளர்கள் அமிர்த.விஜயகுமார், என.இளையபெருமாள், மங்கை சங்கர்,ஏ.ஜி.ஜே. பிரபாகர் ப. முருகமணி, ஏ. ஆர்.ராஜா, பஞ்சு.குமார், பொதுக் குழு உறுப்பினர் ஹர்ஷத் தரங்கம்பாடி பேரூராட்சி தலைவர் சுகுணாசங்கரி, துணை தலைவர் பொன் ராஜேந்திரன், மற்றும் பலர் உள்ளனர்

### அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தலைமையில்- மயிலாடுதுறையில் டிட்வா

# புயலையொட்டி கனமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் ஆய்வுக் கூட்டம்!

## நிவேதா எம். முருகன், எம்.எல்.ஏ., - எம்.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

மயிலாடுதுறை, டிச.1-

மயிலாடுதுற மாவட்டம் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் “டிட்வா” புயலையொட்டி கனமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தலைமையில் நடைபெற்றது.

மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் “டிட்வா” புயலையொட்டி கனமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தலைமையில், கோ.ஆப்டெக்ஸ் மேலாண்மை இயக்குநர், மாவட்ட கண்காணிப்பு அலுவலர் கவிதா ராமு, மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம். முருகன், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர், எம்.பன்னீர் செல்லம், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் எஸ். ஸ்ரீகாந்த், ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

ஆய்வு கூட்டத்திற்கு பின், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் பேரில், மயிலாடுதுறை மாவட்டத்தில் “டிப்வா“ புயலை எதிர்கொள்வது தொடர்பாக ஆய்வுக்கூட்டம் நடைபெறுகிறது. மயிலாடுதுறை மாவட்டத்தில், டிப்;வா புயலின் காரணமாக கடந்த இரண்டு நாட்களில் பரவலாக மழை பெய்து வருகிறது. குறிப்பாக 29.11.2025 காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை சராசரியாக 5.1 செ.மீ மழை பதிவாகியுள்ளது. மயிலாடுதுறை மாவட்டத்தில் வடகிழக்குப் பருமழை தொடங்கியது முதல் அக்டோபர், நவம்பர் மாதங்களில் நேற்று (28.11.2025) வரை 160 குடிசைகளும், 22 ஓட்டு வீடுகள் பகுதியாகவும் சேதமடைந்துள்ளன. மேலும் 117 கால்நடைகள் உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது. ஒருவருக்க காயங்கள் என்ற அளவிலும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளது. மாவட்டத்தில் புயல் மற்றும் மழை காரணமாக ஏற்படக்கூடிய பாதிப்புகளை உடனடியாக அகற்றி இயல்பு நிலை ஏற்படுத்திட ஏதுவாக அனைத்து துறைகளிலும் ஜெசிபி 133, ஜெனரேட்டர்கள் 164, பவர் சா 57, ஹிட்டாச்சி 31, ஆயில் என்ஜின்கள்22, மணல் மூட்டைகள் 40351, மரம் அறுக்கும் கருவிகள் 84, சவுக்கு கம்பங்கள் 34110 பிளிச்சிங் பவுடர் 5870 கிலோ ஆகியன போதிய அளவில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலும், பொதுமக்கள் மழை, சேதம் தொடர்பான புகார்களை தெரிவிக்கும் வகையில், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், செயற்கைக் கோளுடன் இணைக்கப்பட்ட அவசர கால கட்டுப்பாட்டு அறைஎண் 1077 மற்றும் 04364222588 அமைக்கப்பட்டு 24 மணி நேரமும் செயல்பட்டு வருகிறது. மின்சார வாரியம் சார்பில் 10795 மின்கம்பங்கள் இருப்பு உள்ளது. மின்மாற்றிகள் 40 அவசர காலத்திற்கு பயன்படுத்திட இருப்பு உள்ளது. மேலும், கடற்கரையோர கிராமங்களை கண்காணிக்கும் வகையில், 31 வீரர்கள் அடங்கிய மாநில பேரிடர் மீட்பு குழுவினர் சீர்காழியிலும், 31 வீரர்கள் அடங்கிய தேசிய பேரிடர் மீட்பு குழுவினர் தரங்கம்பாடியிலும் முகாமிட்டுள்ளனர்.

மயிலாடுதுறை மாவட்டத்தில் மிகவும் அதிகமாக பாதிக்கக்கூடிய இடங்களாக 12 இடங்கள், அதிகம் பாதிக்கப்படக்கூடிய இடங்கள்33, குறைந்த அளவு பாதிக்கக்கூடிய 80, மிக குறைந்த பாதிக்கக்கூடிய இடங்கள் 76 ஆக மொத்தம் 201 பாதிக்கப்படக்கூடிய பகுதிகளாக கண்டறியப்பட்டு, அவை தொடர் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளன.

இன்றைய தினம், கனமழையோ அல்லது புயலோ ஏற்பட்டால், பாதிக்கப்படக்கூடிய மக்களை பாதுகாப்பாக தங்க வைப்பதற்கு 4 பல்நோக்கு புயல் பாதுகாப்பு மையங்கள் உள்ளது 10 புயல் பாதுகாப்பு மையங்கள் மற்றும் தற்காலிக நிவாரண மையங்கள் பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் 438, திருமண மண்டபம்146, சமுதாய கூடம்68 ஆகியன தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. மாவட்டத்திலுள்ள அனைத்து துறை உயர் அலுவலர்கள் பாதிக்கப்பட்ட மக்கள் தங்க வைக்கப்படும் முகாம்களில் தேவையான உணவு, குடிநீர் ஆகியவற்றை முறையாக வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வருவாய்த்துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் அந்தந்த தலைமையிடங்களில் தங்கி பணிபுரிந்திட அறிவுறுத்தப் பட்டுள்ள னர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி, அரசு நிர்வாகம் இந்த புயலை எதிர்கொள்வதற்கு தயார் நிலையில் உள்ளது.

மயிலாடுதுறை மாவட்டத்தில், மிகவும் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களை பாதுகாப்பாக தங்க வைத்திட தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தாழ்வான பகுதிகளில் தேங்கியுள்ள தண்ணீரை உடனடியாக அப்புறப்படுத்திடவும், பொதுமக்களின் வீடுகளுக்குள் தண்ணீர் புகாமல் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளவும், நீர்வளத்து றை மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு பி அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் பேட்டி அளித்தார்.

ஆய்வு கூட்டத்திற்கு பின் மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி பகுதியிலுள்ள தனியார் மண்டபத்தில் முகாமிட்டுள்ள தேசிய பேரிடர் மீட்புக்குழவினரை பார்வையிட்டு, அங்குள்ள பேரிடர் மீட்பு உபகரணங்களை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆய்வு செய்த பின்னர், தரங்கம்பாடி அரசு மருத்துமனையினை பார்வையிட்டு ஆய்வு செய்து, அங்கு தேவையான மருந்துப் பொருட்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளதா என்று மருத்துவர்கள் மற்றும் பணியாளர்களிடம் கேட்டறிந்தார். ஆய்வு கூட்டம் மற்றும் ஆய்வுகளின் போது மயிலாடுதுறை, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கோ.ஸ்டாலின், மாவட்ட வருவாய் அலுவலர் தபூங்கொடி தி.மு.க.வை சேர்ந்த மாநில விவசாய தொழிலாளர் அணி இணைச் செயலாளர் ஜெக.வீரப் பாண்டியன், தகவல் தொழில் நூட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி.எம். ஸ்ரீதர், மாவட்டக் கழக துணைச் செயலாளர் மு. ஞானவேலன், நகரக் கழகச் செயலாளர்கள் மயிலாடுதுறை குண்டாமணி (எ) என் செல்வராஜ், சீர்காழி ம.சுப்பராயன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் குத்தாலம் கிழக்கு மங்கை எம்.சங்கர், மயிலாடுதுறை வடக்கு என். இளையபெருமாள். செம்பனார்கோவில் மத்தியம் அமிர்த. விஜயகுமார், மயிலாடுதுறை கிழக்கு ப.முருகமணி, குத்தாலம் மேற்கு ஏ. ஆர்.ராஜா, சீர்காழி கிழக்கு பஞ்சு.குமார், சீர்காழி மேற்கு ஏ.ஜி.ஜெ.பிரபாகர், பொதுக் குழு உறுப்பினர் ஹர்ஷத் மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் வெடி பாலமுருகன், முருகன்.தரங்கம்பாடி பேரூராட்சி தலைவர் சுகுணா சங்கரி குமரவேல், துணை தலைவர் ராஜேந்திரன், மற்றும் அரசு துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பி.என். பெரியண்ணன்

**டிசம்பர் 1 (2009)**



தருமபுரி ஒருங்கிணைந்த மாவட்டக் கழகச் செயலாளராகவும், பின்னர் தருமபுரி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளராகவும் பணியாற்றியவர்.

பென்னாகரம் ஒன்றிய கவுன்சிலர், பென்னாகரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் உள்ளிட்ட பொறுப்புகளில் திறம்படச் செயலாற்றியவர்.

“அடக்கமும், அமைதியும் வாய்ந்தவர். எதற்கும் அதிர்ந்து பேசமாட்டார். கழகத் தோழர்களிடம் அன்பாகப் பழகி அனைவரையும் கட்டுக்கோப்பாக வைத்திருந்தவர்” என தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**